4 கவன ஈர்ப்பு

(அ) சேலம் பேருந்து நிலையம் கட்டப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. கே. அர்ஜுனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ''சேலம் பேருந்து நிலையம் தற்போதுள்ள இடத்திலிருந்து மாற்றப்பட்ட அந்த இடத்தில் பேருந்து நிலையம் கட்டப்படாததால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

சேலம் நகராட்சி மையப் பேருந்து நிலையம் நகரின் மத்தியில் 2 ஏக்கர் மனையில் அமைந்திருந்தது. இந்த பேருந்து நிலைய அமைப்பிடமும் சிறிய பரப்பும் போக்குவரத்து நெரிசல்களை ஏற்படுத்தியது. மேலும் வெளியூர், மற்றும் நகரப் பேருந்துகளுக்கு போதுமானதாகவும் இல்லாமலிருந்தது. எனவே, நகர பேருந்துகளின் சேவையை ஏற்கனவே இருந்த பேருந்து நிலையத்திலேயே தொடர்ந்து அனுமதித்துவிட்டு, அனைத்து வெளியூர் பேருந்துகளும் ஓமலூர் சாலையில், தற்போது பயன்படாமல் இருக்கும் அச்சுவான் ஏரியான 24.62 ஏக்கர் நிலப்பரப்பளவில், 15-7-1988 முதல் மாற்றி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்குமிடம் இரண்டும், தண்ணீர் வசதிகளுடன் கூடிய கழிப்பிடங்கள் இரண்டும் உள்ளன. 22 சோடியம் ஆவி விளக்குகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 4 சின்டெக்ஸ் (Syntex) தொட்டிகள் நிறுவப்பட்டு லாரி மூலம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர பேருந்துகள் நிறுத்துமிடமும் மற்ற பகுதிகளும் மண்ணிட்டு நிரப்பப்பட்டும், சாலையிலும் பேருந்து நிற்குமிடத்திலும் தார் தளமிடப்பட்டும் உள்ளது. மேற்கூறிய அடிப்படை வசதிகள் செய்வதற்காக சேலம் நகராட்சியால் மொத்தம் ரூ. 26,76,500 செலவிடப்பட்டுள்ளது. இப்பேருந்து நிலையத்தில் அரசு போக்குவரத்துக் கழகங்களான, அண்ணா போக்குவரத்துக் கழகம், அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றின் நேர அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர சேலம் பொன்னி சிறப்பங்காடியால் சிற்றுண்டி நிலையமும், புத்தகக் கடையும், பெட்டிக் கடையும் நடத்தப்பட்டு வருகிறது.

[திரு கோ. சி. மணி] [1990 மே 8

2. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நகராட்சி நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.193.00 லட்சம் மொத்த மதிப்பீட்டில் மேலும் பல அடிப்படை வசதிகளும் செய்து தர 30-9-1989-ம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசாணை எண். 691-ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி இப்பேருந்து நிலையத்தில் 80 வெளியூர் பேருந்துகள் நிறுத்துமிடங்களும், 12 நகரப் பேருந்துகளுக்கு உரிய நிறுத்துமிடங்களும் மேலும் கீழ்க்காணும் வசதிகளும் செய்து தரப்படும்:-

(1)	உணவகங்கள்	2 எண்ணிக்கை
(2)	கடைகள்	56 எண்ணிக்கை
(3)	பயணச் சீட்டு நிலையங்கள் ..	4 எண்ணிக்கை
(4)	நேர அலுவலகம்	1 எண்ணிக்கை
(5)	தங்கு கூடங்கள்	2 எண்ணிக்கை
(6)	காவல் நிலையம்	1 எண்ணிக்கை
(7)	அஞ்சல் அலுவலகம்	1 எண்ணிக்கை
(8)	வைப்புப்பொருள் நிலையம் ..	1 எண்ணிக்கை
(9)	கழிப்பகங்கள்	5 எண்ணிக்கை
(10)	சைக்கிள் நிறுத்துமிடம்	1 எண்ணிக்கை
(11)	ஆட்டோ மற்றும் கார் நிறுத்துமிடம்	1 எண்ணிக்கை

மேற்காணும் பணிகளில் மதிப்பீடுகளுக்கான தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர், தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட மேலாண்மைக் குழுவினரால் நிதி விடுவிக்கப்பட்டு மேற்காணும் பணிகள் துவங்கப்பட்டு 31-3-1992-க்குள் முடிக்கப்படும்.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24.62 ஏக்கர் பரப்பளவுள்ள ஏரியின் ஒரு பகுதியில் உருவாகியுள்ள பஸ் ஸ்டாண்டில் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள புதர்களிலிருந்து பாம்புகள் வருகின்றன. அவையில் வைக்கப்பட்டுள்ள அறிக்கைப்படி 30-9-1989-ஆம் தேதியே ரூபாய் 193 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகளின் மதிப்பீடுகளுக்

கான தொழில் நுட்ப அனுமதி ஏன் 8 மாதங்களாக வழங்கப்படவில்லை? தமிழ்நாடு நகர்ப்புற அபிவிருத்தித் திட்ட மேலாண்மைக் குழு ஏன் 8 மாதங்களாக நிதியை விடுவிக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவரவர்களே, கடன் பெறுவதில் சற்று காலதாமதமான காரணத்தால், மதிப்பீடுகளும் கொஞ்சம் காலதாமதம் ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு துரித நடவடிக்கை எடுக்கச் சொல்லி, இங்கிருந்து அவர்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது. எது எப்படி இருந்தாலும் குறிப்பிட்ட 1992 மார்ச் இறுதிக்குள் நிச்சயமாக அந்தப் பணிகள் முடிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் ஸ்டாண்டை விட்டு வெளியேறும் புதிய சாலை அமைக்க தனியாக உலக நாடுகள் வங்கி 230 இலட்சம் சாங்ஷன் செய்துள்ளது. இந்தச் சாலை ஒரு வழிச் சாலைதான். எனவே தனி நபர்களுக்குப் பாதகம் ஏற்படாமலும், நிலத்தை ஆர்ஜிதம் செய்வதன் மூலமாக அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படாத வகையிலேயும், அகலமாக அமைக்கும் நோக்கத்தை அரசு மாற்றி அமைக்குமா? அந்தச் சாலை அமைக்கும் பணி எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மதிப்பீடு கிடைத்தவுடன் துவங்கும்.

(ஆ) கண்டமங்கலம் ஒன்றியப் பகுதியில் பம்பு செட்டுகளுக்குக் கூடுதல் மின் திறன் அளிக்காதது குறித்து.

திரு. ச. அழகுவேலு : பேரவைத் தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், கண்டமங்கலம் ஒன்றியத்தில் சுமார் 30 கிராமங்களில் 150க்கும் மேற்பட்ட மின்சார......

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பிலே இருப்பதை படிக்க வேண்டும். நானே படிக்கட்டுமா?

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கவன ஈர்ப்பை மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.